# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.201/2024

### அ.சா. 13(LW 24 )

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சிவசங்கரன் | தொழில் | |
| த/ பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 22.06.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

2,7,8,9 எதிரிகள் ஆஜர். 1,3,4,5,6, எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. 10,11 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.09.2023 அன்று குற்ற எண். 182/2023 திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய வழக்கு தொடர்பான கீழ்க்கண்ட தடயச் சொத்துக்களை கனம் நீதித்துறை நடுவர் எண்.3 முழுகூடுதல் பொறுப்பு திண்டுக்கல் அவர்களின் கடிதத்துடன் முதுநிலை காவலர் 1887 திரு.ராம்பாபு அவர்கள் மூலம் பகுப்பாய்வுக்கு பெறப்பட்டது.

**தடயச் சொத்துக்களின் விவரம்**

இனம் எண். 01 –அடர் பழுப்பு நிற கரை படிந்த கற்களுடன் கூடிய மண் சிறிதளவு

இனம் எண் 02– புற்பூண்டு மற்றும் கற்களுடன் கூடிய மண் சிறிதளவு

இனம் எண் 03– அடர் பழுப்பு நிற கரை படிந்த 75 செமீ நீளம் உடைய துருபிடித்த அரிவாள் ஒன்று

இனம் எண் 04– அடர் பழுப்பு நிற கரை படிந்த 74 செமீ நீளம் உடைய துருபிடித்த வாள் ஒன்று

இனம் எண் 05– அடர் பழுப்பு நிற கரை படிந்த 34 செமீ நீளம் உடைய இருபுறமும் கூர்மையுடைய கத்தி ஒன்று

இனம்எண் 06– அடர் பழுப்பு நிற கரை படிந்த 46 செமீ நீளம் உடைய துருபிடித்த அரிவாள் ஒன்று

இனம் எண். 07- அடர் பழுப்பு நிற கரை படிந்த 35 செமீ நீளம் உடைய துருபிடித்த வெட்டுக்கத்தி ஒன்று

இனம் எண் 08- அடர் பழுப்பு நிற கரை படிந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பை ஒன்று

இனம் எண் 09- அடர் பழுப்பு நிற கரை படிந்த மஞ்சள் /நீலம் /வெள்ளை கட்டம் போட்ட கருப்பு வேட்டி ஒன்று

இனம் எண் 10- அடர் பழுப்பு நிற கரை படிந்த கிழிந்த நீலம் , வெள்ளை /ரோஸ் கலர் பூ டிசைன் போட்ட வெள்ளை /ரோஸ்கலர் சட்டை ஒன்று

இனம் எண் 11- அடர் பழுப்பு நிற கரை படிந்த கிழிந்த ஆரஞ்சு/கருப்பு நிற பனியன்

இனம் எண் 12- அடர் பழுப்பு நிற கரை படிந்த கிழிந்த சாம்பல்/பழுப்பு நிற சார்ட்ஸ்

இனம் எண்.13- மாதிரி இரத்தம் கொண்ட Gauze cloth ஒன்று

மேற்கண்ட இனங்களை பகுப்பாய்வு செய்து இன எண். 1 மற்றும் 3 முதல் 12 வரையிலான இனங்களில் இரத்தம் காணப்பட்டது, இனம் எண். 2ல் இரத்தம் காணப்படவில்லை என MDU/Biol/333/2023 நாள் 11.10.2023 என்னும் உயிரியியல் அறிக்கை கனம் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது. அந்த உயிரியியல் அறிக்கை **அ.த.சா.ஆ.14.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இரத்தம் கண்டறியப்பட்ட MDU/Biol/333/2023மூலம் இரத்தவகை கண்டறிய குருதி வடிநீரியியல் பிரிவில் பெறப்பட்ட மேற்கண்ட இனங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு மேற்கண்ட இனங்களில் காணப்பட்டதில் மனித இரத்தம் என்றும் இனம் எண்.9 ,10,11 மற்றும் 12ஆகியவற்றில் இரத்த வகை B என்றும் பிற இனங்களில் காணப்பட்ட இரத்தம் இன்ன வகை என்று அறுதியிட்டு கூற இயலாது என்னும் MDU/Ser.MD/263/2023 . நாள். 28..11.2023 என்று நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது. அந்த குருதி வடி நீரியியல் அறிக்கை **அ.த.சா.ஆ.15.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1,11எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு அனுப்பபட்ட மாதிரிகள் ஒரே பெட்டியில் வைத்து அனுப்பபட்டதா என்றால் சரிதான், ஆனால் தனிதனி கவரில் வைத்து முறையாக வழங்கப்பட்டது. மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது, ஆனால் அறிக்கையில் சொல்லியுள்ளேன். எல்லா வழக்கு சொத்துக்களையும் மர பெட்டியில் ஒன்றாக அனுப்பியதால்தான் என்னால் இரத்தவகை சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல.

**2 முதல் 7,10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**8,9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.23 21:30:28 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.